உ

கடவுள் துணை.

# பகவனுமை விசேடம்

இ ஓரு

கஸ்டம் ஆபிஸ் கு. இராஜு முதலியார்.

வேண்டுகோளின்படி

வேதாந்த சித்தாந்த சமரச வித்வான்

கோ. வடிவேலு செட்டியார் அவர்கள்

மாணாக்கர்

## கோ. தாமோதர முதலியார்

அவர்களால் எழுதப்புட்டு

சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில்

பதிபிக்கப் பட்டது.

ரிஜிஸ்தர் காப்பிரைட்.

இதன் விலை] 1916. [அணா-1.

உ

கடவுள் துணை.

# முகவுரை.

எண்ணிலாத நெடுங்காலம் தொல்வினை தொடர்ச்சி வலியால் சமுசார சாகரத்தில் மூழ்கிவரும் எம்போன்ற இளைஞர்களுக்கு இச்சிறு நூல் மிக்க உபயோகமுள்ளது. இதை அனுதினமும் அப்பியாசம் செய்துகொண்டு வருபவர்களுக்கு எங்ஙனம் ஊருர் காயானது வெகுநாள் பதத்தால் தித்திப்பாகின்றதோ அங்ஙனம் அகங்கார மமகார முதலிய தற்போதம் நீங்கி மனதானது தூய்மை அடைந்து கரையேறுவார்களென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

இந்நூலின் அபிப்பிராயமாவது முதலிலும் கடையிலும் கூறியதுபோல அப்பியாசம் செய்யவேண்டுமென்பது கருத்தாம்.

கோ. தாமோதர முதலியார்.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் சென்னை பெருமாபேட்டை வல்லம் பங்காருசெட்டி தெருவு 3-25வது நெம்பர் வீட்டில் பெற்றுக் கொள்ளலாம்.

வேப்பேரி போட்ஸ் மதராஸ்.

உ

கடவுள் துணை.

# பகவனும விசேடம்.

## நேரிசை வெண்பா.

அண்ணனு ரைந்துகரத்தானுக வாரழுவின்
வண்ணனு ரீன்ற மயிலோனே-கண்ணனுர்
மெச்சுந் திருமருகா மேதினியில் உன்பதமே
இச்சிக்க நன்கருள்வாயே.

தற்காலம் பிரபஞ்சத்தில் மக்கள் கூட்டங்கள் பகவனும விஷயத்தில் அஃதாவது சம்போ, மகாதேவா, வேலுமயிலும், கோவிந்தா, அச்சுதா, வாசுதேவா, சிவா, குமரா, ராம், முதலியவைகள் அதிக விசேடமென்றுணராது சாமானியமாக யோசிக்கின்ருர்கள் அது பூஜை, யோகம், தவமுதலியவைகளைப் பார்க்கிலும் சிறந்ததென்றும், பந்தநிவர்த்தி சாதனமென்றும், மோட்ச சாதனமென்றும், அறிவில்சிறந்த பெரியோர்களால் கூறப்படுகின்றது. எம்மதத்தனுயிருந்த போதிலும் மேற்கண்ட நாமங்களிலொன்று எதுபிரியமோ அல்லது எது வெகுநாள் பழக்கமோ அதை வைராக்கியத்துடன் உறுதியாககடைப்பிடித்துக்கொண்டு நாள்தோறும் தியானம்செய்துகொண்டு வருவானுனல் அவனுக்கு சமுசாரதுக்கம் படிப்படியாய் நீங்குவதாம், உலகத்தில் அஷ்டைசுவரியமு முண்டாவதாம், மேலானபதவியும் கிடைப்பதாம். இதில் யாதொரு சந்தேகமுமில்லையாம்.

## சிந்திக்கும் வகை.

மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்குமாலை சதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்-கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாம் காணுக் கதி.

என்று உலககடையும் பழிப்புமல்லாத ஆன்றோர் கூறிய படி ஒவ்வொருவரும் அப்பியாசம் செய்ய முயலவேண்டும். எங்ஙனம் பாடுபட்டுத்தேடிப் பணத்தைசம்பாதிக்க நாளுக்குநாள் பிரயத்தினப் படுகின்றனே அங்ஙனம் நாளாவட்டத்தில் சிறிது சிறிதாக பாடுபட்டுத்தேடி சம்பாதிக்க பிரயத்தனப்பட வேண்டும். மேலும் நாள் ஒன்றுக்கு 24 மணிநேரம் காலம் நிர்ணயிக்கப்பட்டது. அதாவது 1440 நிமிஷமாகின்றது இதில் 1435 நிமிஷம் மனைவி மக்கள் முதலிய இலௌகீகத்தில் உழைத்தாலும் 5 நிமிஷம் பகவான் விஷயத்தில் முன் கூறினபிரகாரம் உழைக்க வேண்டும் அங்கனம் உழைக்காத தேகம் மனிதத்தேகமல்ல;ஆனபடியால் ஒவ்வொருவரும் நித்திரைக்குப் போகிறதற்கு முன்னும், பின்னும், மத்தியிலும் அல்லது எத்தொழிலைச் செய்தபோதிலும் முன் குறிக்கப்பட்ட நாமங்களை அப்பியாசம் செய்துகொண்டு வரல்வேண்டும். அவ்வப்பியாசத்தினுல் வைராக்கிய முண்டாகும். வைராக்கிய முண்டானுல் மனமானது தூய்மை உடையதாகும். தூய்மை உடையதானுல் கெட்ட வாசனை நீங்கிப்போம். கெட்ட வாசனை நீங்கினுல், மனது நிலைப்படும். மனது நிலைப்பட்டவுடன் எது திடப்பட்டதோ அது வந்து தோன்றி மறையும். மறைந்ததென்று விட்டு விடப்படாது. மறுபடியும் அவ்வாறே தனி அறையில் உட்கார்ந்து தியானம் செய்தல் வேண்டும். அது முன்போலவேதோன்றி மறையும். மீண்டும் முன்கூறப்பட்ட நாமங்களுள் ஒன்றை இடைவிடாத வைராக்கியத்துடன் தியானம் செய்துகொண்டு வருபவனுக்கு வெகுநாள் திடப்பட்டுவர்த மூர்த்தம் எதுவோ அது அவ்வா

றே உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தோன்றும். அதனால் தோன்றிய ஆநந்தத்தைஇத்தன்மையுடையதென்று சொல்லுதலும், எழுதுதலும் முடியாது. அனுபவித்தால்தான் அது தெரியவரும். ஆன்மகோடிகள் யாவும் இதனை அனுசரித்து வந்தால் மேற்சொல்லிய நிலையை யடையலாம். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லையாம். மேலும் இதனைப் பண்டிதன் முதல் பாமரன் வரைக்கும் அல்லது அரசன்முதல் ஏழைவரைக்கும் அஃதாவது யாவரும் சமுசார சம்பந்தத்தி லிருந்துகொண்டே அனுசரிக்கலாம். ஓர் அரசன் ராஜபரிபாலனம் செய்துகொண்டு தன் குலமுழுவதும் பகவனுமங்களைத் தியானம் செய்து அதனால் மனது தூய்மையடைந்து மோக சோகங்களைஜெயித்து அதன்பின்மோட்சத்தை அடைந்தானென்று பெரியோர்களால் கூறப்பட்டிருக்கின்றது. அஃதாவது (1)ராஜன், (2)ராணி, (3)ராஜபுத்திரன், (4)புத்திரனதுமனைவி (5) தாசி, என்னுமிவர்கள் மோகஜித்தா யிருந்தார்கள். இந்த மோகமின்றிய வார்த்தையைக் கேட்கின் சிறிதும் மோக முண்டாகாது.

ஓர் ஞானமுடைய ராஜாவின் குலமுழுவதும் மோகத்தை ஜெயித்தவர்களா யிருந்தனர். ஒரு சமயத்தில் ஓர் வனத்தில் புலி ராஜநகரத்தின் ஜனங்களை நாள்தோறும் வந்து கொல்லத்தொடங்கியது அதனை கொல்லுதற்பொருட்டு அநேக மனிதர்களோடு ராஜகுமாரன் குதிரையில் ஏறி வனத்திற்குச் சென்றான் அந்தப்புலி கண்ணுக்குப் புலப்படவே எல்லாமனிதர்களையும் பின்விட்டுத் தான் மாத்திரம் ஒருவனுகவே புலியின்வழியை அனுசரித்தான் பின்னர் சாயங்காலத்தில் அப்புலி மறைந்துவிட அப்போது அந்த அரசகுமாரன் கங்கையின் சமீபத்திலிருந்த ஓர் யோகியின் ஸ்தானத்தைக்கண்டு அதன் சமீபத்திற்சென்று அந்த யோகீசுவரருக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான் அவனைப்பார்த்து யோகீசுவரர் நீ யார் என்றுகேட்டார். அப்போது ராஜகுமாரன் யான் மோகஜித்து (மோகத்தை ஜெயித்தவன் அஃதாவது வந்ததைப்பற்றி சந்தோஷமும், போனதைப்பற்றித் துக்கமும் அடையாமலிருப்ப

வன்) என்று சொன்னான் அதனைக்கேட்டு யோகி ஆச்சரியம டைந்தார் அதனைக்கண்டு ராஜகுமாரன் யோகீந்திரரே? யான் மாத்திரமே மோகஜித்தல்லன். என் குலமுழுதும் மோகஜித் தர்தாம் என்று கூறினான்: அதனைக்கேட்டு யோகீசுவரர் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்து ராஜகுமாரனே! உங்களுடைய குல முழுவதும் மோகஜித்தென்னும் வார்த்தையை யான் எப்படி அறிவது என்றுகேட்க ராஜகுமாரன் சொல்லுகின்றான். ஐயா சுவாமி; அடியேன் அணிந்திருக்கும் மோதிரத்தின்மீது மோ கஜித்து என்னும் பெயர் பதிந்திருக்கின்றது இதனை எடுத்து க்கொண்டுபோய்ப் பரிக்ஷிக்கலாம் என்றான் அதனைக்கேட்ட யோகி மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு ராஜநகரத்திற்குச் சென்று முதலில் தாசியினிடம் சென்று மோதிரத்தைக் காண் பித்து மாதே உனது அன்பன் நமது வனத்திற்கு வேட்டை க்குவந்தபோது அவனைப் புலிதொடர்ந்து கொன்றுவிட்டதெ ன்று சொல்ல அதனைக்கேட்ட தாசி? அங்கனமாயின் "பகவன் சங்கற்பமே" என்று உத்தரம் மொழிந்தாள். அப்போது யோ கீசுவரர் இவள் அபிமான ஸ்திரியானபடியால் இவளுக்குச் சோகமுண்டாகவில்லை ஆனால் ராஜகுமாரனது மனைவிக்கு கட்டாயம் மோகமுண்டாகுமென்று நினைத்து அவளிடம் சென்று ஷை மோதிரத்தைக் காண்பித்து அம்மணி! உனது நாயகன் வேட்டைக்கு வனத்திற்கு வந்தகாலத்து அவனைப் புலிகொன்று விட்டதென்றுசொல்ல, அதனைக்கேட்ட ராஜகு மாரனது மனைவி "போனதைப்பற்றி விசாரப்படுவது புத்தி யீனம்? என்று மறுமொழிகூறினாள். அப்போது யோகி இவளு க்குத் தாய் தந்தைமுதலியவர்கள் இருத்தல்பற்றி மோகமுண் டாகவில்லை, ஆனால் பத்துமாதம் சுமந்துபெற்று வளர்த்த மாதாவுக்குக் கட்டாயம் மோகமுண்டாகு மென்றெண்ணி அவளிடம் சென்று மோதிரத்தைக்காண்பித்து அன்னையே? உனதுகுமாரன் நம்வனத்தில் உயிர் நீங்கியிருக்கக் கண்டே னென்று சொல்ல அதனைக்கேட்ட தாயானவள் யோகீசுவா ருக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து யோகீசுவரரே அற்பகாரியத்திற்காகத் தாங்கள் தவத்தைவிட்டு! என்வர்? ந்தீ

"அவரவர் வினையில் அவரவர் வருவார்" என்பது திண்ணம் என்றுசொல்ல, அதனைக்கேட்ட யோகீஸ்வரர் இவளுக்குத் தன் நாயகன் இருத்தல்பற்றி மோகபூர்வகமான சோகமுண்டாகவில்லை? ஆனால் தந்தைக்கு யௌவனமான புத்திரனது நாசத்தாலும், தனக்குப் பின் பிதுர்க்கடன் முதலியவைகள் செய்வதற்குப் பின்னம் வற்பட்டதால், மோகபூர்வகமான சோகமுண்டாகுமென்றெண்ணி, தந்தையினிடம் சென்று ஷை மோதிரத்தைக் காண்பித்து, ஐயா! உனது குமாரன் நம் வனத்தில் வேட்டைக்கு வந்தபோது அவனைப் புலிகொன்று விட்டது. இதனைத் தங்களிடம் தெரிவிக்கும் பொருட்டு யான் வந்தேனென்று சொல்ல அதனைக்கேட்ட அரசன் யோகிக்குப் பாத பூஜை முதலியவைகளைச் செய்து, யோகீந்திரரே "எல்லாம் இறைவனது செயலே" இது சாமானியர்களுக்கும் தெரியுமல்லவா ஆனால் தங்கள் "யோகம்தான்" தடைப் பட்டது என்றுசொல்ல யோகீசுவரர் மீண்டும் சோதனை செய்யும்பொருட்டு ஓர் விதச் சந்தோஷமான வார்த்தையை சொல்லவேண்டுமென்று மனதில் எண்ணி, அவ்வெல்லோருக்கு முன்பாக, ராஜகுமாரன் நம்வனத்தில் சுகமாய்இருக்கின்றான். யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால் உங்களைப் பரிக்ஷிக்கும் பொருட்டு இவ்வாறாகக் கூறினேன் என்றுசொல்ல, அதனைக் கேட்டு அவ்வெல்லோரும் யாதொரு சந்தோஷமு மடையவில்லை ஆனால் "அங்ஙனமாயினும் நலமே" என்று சொன்னார்கள். அதன்பின் யோகீசுவரர் தம்வனத்திற்குச் சென்று ராஜகுமாரனை நோக்கி, அப்பா? நீ சொல்லியவாறு உன் தந்தைமுதலியவர்களிடம் சென்று மோதிரத்தைக் காண்பித்தவுடன் ஐயா! யாது விசேஷம்! யாது காரணம் நீர் ஏன்வந்தீர் என்று வினவினார்கள். அதற்கு யான் விசேஷ மொன்றுண்டு அதாவது, ராஜகுமாரன் நம்வனத்திற்கு வந்து புலிவேட்டையாடி இறந்தானென்று சொன்னேன் அதனைக்கேட்டு அவ்வெல்லோரும் துக்கசாகரத்தில் மூழ்கினார்கள். யான் அவர்களுக்கு ஒருவாறாக தேறுதல் சொல்லிவிட்டு வந்துவிட்டேனென்றுசொல்ல ராஜகுமாரன் ஐயா! சுவாமி தங்களுக்குமிக்க

சிரமம் கொடுத்தேன்! மன்னிக்கவேண்டும். யாங்கள் செய்தத வமும், பூஜையும், அவ்வளவு தான்என்றான். அதனைக்கேட்ட யோகீசுவரர் ஆச்சரிய மடைந்து யான்உங்களை பரிட்சிக்கும் பொருட்டுப் பலவாறாக மொழிந்தேன்! உங்களுடைய நிலை பிரியவில்லை, நீங்கள் செய்த தவமே, தவம். உங்கள் குலத் திற்கு மோகஜித்தென்னும் பெயர் வாய்ந்தது தகும் என்று கூறி மீண்டும் யோகீசுவரர். ராஜகுமாரனைப்பார்த்து, அடி யேன்! அநேக காலம் சன்னியாசம் பெற்று இவ்வனத்தில் யோகம் செய்துகொண்டிருக்கிறேன். இது காறும் என க்கு அந்நிலை கிடைக்கவில்லை. உங்களுக்கு இது கிடைத்த வாறு எங்ஙனம்? அதை எனக்கு அனுக்கிரகம் பண்ணவேண் டுமென்று கேட்க, ராஜகுமாரன் யாங்கள் பகவனுமங்கள் விசேடத்தால் இவ்வாறு, அடைந்தனம்? அதனை எவனொரு வன் இடைவிடாமல் தியானம் செய்துகொண்டு வருகின் றானோ அவனுக்கு எல்லாவிதச் சுதந்தரமும், யோக முதலிய வைகளும் சுலபமாய்ச் சித்திக்குமென்று சொல்லிவிட்டு தன் நகரத்திற்குச் சென்றனன்.

அதனைக்கேட்ட யோகீசுவரர் ராஜகுமாரன் சொன்ன வார்த்தையைக் குருவாக்காகப் பெற்றுக்கொண்டு தன்யோக த்தைவிட்டு, பகவனுமங்களி லொன்றைக் கடைப்பிடித்துக் கொண்டு திடசித்தத்துடன் தியானம் செய்யத்தொடங்கினார் இவ்வாறாக, அவர் பக்தி வைராக்கியத்துடன் செய்துவரும் காலத்து இனவு அந்த யோகிக்குப் பூர்வபுண்ணிய வசத்தினு லும் சாதுசங்க (இங்கும் சாதுசங்கமாவது யாதெனில் மோக ஜித்தின் குலமுழுவதையும் தெரிசித்தல்) பயிற்சியினாலும் கூடிய சீக்கிரத்தில் பேரானந்தம் பெற்றுச் சொருபஸ்திதி அடைந்தனர்.

இதுநிற்க முன்கூறப்பட்ட மோகஜித்தென்னும் ராஜா வின் குலமுழுவதும் நீதிவழுவாமலும் தத் தம் நிலையில் பிரியா மலும் அரசாட்சி செய்துவருங்காலத்து சாக்ஷாத் பகவான்

இவர்களைச்சோதிக்கும் பொருட்டு அரசனது அரண்மனை யின் ஓர்பக்கத்தில் தீப்பற்றி எரியும்படி செய்தனர்.

அப்போது அரண்மனை வேலைக்காரர்க ளெல்லோரும் அதனை அவிக்க முயன்றனர். அது அனுகூலப் படவில்லை அதன்பின் பயந்து எல்லோரும் ராஜனிடம் சென்று ஐயா! அரசனே நமது அரண்மனையின் ஓர பக்கத்தில் தீபற்றி எரிகி ன்றது. எங்களாலானமட்டும் பிரயத்தினப் பட்டுப் பார்த் தோம்? அதனை அவிக்கமுடியவில்லை என்றுகூற அப்போது அரசன் "எதுவந்தாலும் அனுபவிக்க வேண்டியது நமது கடமை" என்றுசொல்ல, உடனே வேலைக்காரர்க ளெல்லோ ரும் நமது அரசனுக்குப் பயித்தியம் பிடித்திருக்கின்றது போலுமென்று நினைத்து வெளியே போய்விட்டார்கள். உட னே, பகவான்1 சந்நியாசி வேடம்பூண்டு அரசனிடம் வந்து, ஓ! அரசனே; இது என்னவிந்தை! உனக்குப் பித்தம் பிடி த்தாற்போல் தோன்றுகின்றது. அரண்மனை முழுவதும் தீப ற்றிஎரிகின்றது. நீயோ, யாதொரு பிரயத்தினமும் செய்யாம லிருக்கின்றாயென்று சொல்ல, அப்போது அரசன். ஐயா சுவாமி! என்னசெய்யலாம்! "பிரயத்தினத்தினால் பிராரத்து வம்போய் விடுமா" என்று உத்தரம்சொல்ல, உடனே சன்னி யாசிவேடமாகவந்த பகவான்! இனி யாம் தக்கவாறு அனுக்கி ரகம் பண்ணவேண்டுமென்று நினைத்து, ஓ. மோகஜித்தர சனே உனக்கு என்னவரம் வேண்டுமென்றுகேட்க, அதனை க்கேட்ட அரசன் மனம்தடுமாறி, வாய்குளறி, மெய்நடுங்கி, கண்ணீர்சொரிந்து, என்னய்யனே என்குலமுழுவதும் இந்த பிறவிக்கடலைத் தாண்டவேண்டுமென்று கேட்க, அப்போது சன்னியாசிவேடம் தரித்த பகவான். எங்ஙனம் வல்லார்களா கிய நால்வருக்கு அனுக்கிரகம் செய்தரோ அங்ஙனம் அனுக் கிரகம் செய்துவிட்டுப் பின் மறைந்தனர். அதன்பின் சில நாள்கழிந்து மோகஜித்தின் குலமுழுவதும் மோட்ச (பந்த விடுகை) த்தை அடைந்தார்களென்று பெரியோர்களால் சொல்லப்படுகின்றது. இந்தமோகஜித்தின் வரலாற்றை மாத் திரம் அடிக்கடி கவனித்து வாசிப்போனுக்கு உலக விஷயங்க

ளில் இச்சை யுண்டாகாது. தவிர, மோக சோகங்களும் உண்டாகா? அன்றியும், எதுவந்தாலும் எதுபோனாலும் அவன் கவனிக்கமாட்டான்.

தன்னிலையில் தான்பிரியாமலிருப்பானென்பது திண்ணம் இதனை அனுபவத்தில் தெரிந்து சொள்ளலாம். மேற்படி மோகஜித்தின் குலம் முழுவதும் மோட்சம் அடைந்ததற்குக் காரணம் பகவனுமங்களே யொழிய வேறில்லை என்பதாம்.

ஆனபடியால், மோகஜித்தின் குலமுழுவதும் பகவனுமங்களை அனுசரித்து அதனால் மோட்சத்தை அடைந்தவாறு நாமும் பகவனுமங்களை யனுசரித்து அதனால் மோட்சத்தை அடையவேண்டும். இதுநமக் கவசியமானதாம்.

சிந்திக்கும் வகையைப்பற்றி முதலில் ஒருவாறாய்க் கூறினோம்: இன்னும் என் போன்ற இளைஞர்களுக்கு மற்றோர் சுலபமான வழியுளது.

கீழ்குறிக்கும் விதிப்படி மேற்சொல்லிய பகவனுமங்களி லொன்று எது அதிகபிரியமோ அல்லது எது வெகுநாள் பழக்கமோ அதை தினந்தோறும் உச்சரிக்க வேண்டும்.

(1) காலையில் நித்திரையிலிருந்து விழித்து, படுக்கையி லிருக்கும்போது,

(2) எழுந்து உட்கார்ந்து,

(3) எழுந்து நின்றவுடன்,

(4) பூஜாகாலத்தில் ஷ பூஜை முடிவுபெறுமளவும்,

(5) போஜனம் சாப்பிடுவதற்கு முன்,

(6) போஜனம் சாப்பிட்டு எழுந்தவுடன்,

(7) உத்தியோகத்திற்கு போகவீட்டில் புறப்படும்போது

(8) வீட்டைவிட்டு உத்தியோகத்திற்கு போகுமளவும்,

(9) உத்தியோகத்திற்குப் போனவுடன் வேலையாரம்பிக்காததற் முன்னும் பின்னும்,

(10) உத்தியோகத்தைவிட்டு வீட்டிற்குமருமளவும்,

(11) வந்தவுடன் இராப்போஜன முதலியவைகள் செய்வதற்கு முன்னும் பின்னும்,

(12) நித்திரைக்குப் போனவுடன்,

இவ்வாறாகச் சிலகாலம் மேற்கண்டவாறு அப்பியாசம் செய்துகொண்டு வந்தால், மனதானது பரிசுத்த மாகும்' அதனால், காதல், கவறாடல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் முதலிய துர்க்குணங்கள் உடனே விட்டு விலகிப் போம். தவிர யாதொரு துன்பமும் அணுகாது. எப்போதும் சுக ஜீவியாயிருக்கலாம். அதன்பின் சிலகாலம் காலையிலாவது, அல்லது மாலையிலாவது தனிமையாக உட்கார்ந்து ஷை நாமத்தைக் கால்மணி நேரம், நாள்தோறும் அப்பியாசம் செய்யவேண்டும். அதன் பின்னர் சிலகாலம் ஷை நாமத்தின் சொரூபாகாரமாக (மூர்த்தத்தின் உருவம்) தியானம் செய்யவேண்டும். இந்தப்படிக்கு சிலகாலம் தியானம் செய்துகொண்டுவந்தால், மனதானது நிலைப்பட்டு சொரூஸ்திதியடைந்து, மோட்சத்தை அடையலாம். அந்தச் சொரூஸ்திதிதான் நிருவிகற்ப சமாதியென்று சொல்லப்படும். இது பற்றி சகுணோபாசனையின்கண் தெளிவாய் எழுதியிருக்கின்றேம். பகவனாமங்களின் பெருமையைப் புகயான் தரமல்ல ஆயினும் பகவானருளால் ஒருவாறாகச் சொல்லி முடித்தனன்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

## சூதகவாய்வுக்கு எண்ணெ.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில் ஸ்ரீகள் பெரும்பாலர் ஷை தோஷத்தால் அடியிற் குறிப்பிட்டிருக்கும் பலரோகங்களால் விலக்கம் வரு முன்னும் பின்னும் அதே சமயத்திலுமுண்டாகும் வலியின் உபத்திரவத்தைப் போக்கி அனுபவத்தில், சிலர் சந்தான பலன் அடைந்து மிருக்கிற இந்த அற்புதமான கேசரிப்பாலெண்ணெயை சாப்பிடுவதால் தீரும் வியாதிகள் விபரம்.

வலக்கட்டு சூதகவாய்வு, கெற்பவிப்புருதிகள் இடுப்பு நோவு, குடைச்சல், விருவிருப்பு யோனி சூலை, 2,3, 4, மாதம் இப்படியாக நின்று அழிந்து போவதும், ஒரு வேளை பிள்ளை பிறந்தால் யிறந்து போவதும் கெற்பணியானவர்களுக்கு இறந்தியாலும் பிள்ளை பிரந்து மருப்பிள்ளை யில்லாமலிருந்தாலும் ஷை எண்ணெயைக் குடிக்க கெற்பமுண்டாகும் கெற்பத்திலுண்டான சகல ரோகம் தீரும்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசபடி நேரிலும் கடிதமூல மேலும் யெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்.

பூ. தி. மாசிலாமணி முதலியார்,
3-25. வல்லம்பங்காரு செட்டி தெருவு,
வேப்பேரி போஸ்டு,
பெருமா பேட்ஸ்ட்,
மதராஸ.